வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 24.10.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 297 பக்கங்கள் : 08

# வடக்கில் போதைப்பொருள் பரவுவதில் இராணுவத்துக்கு பெரும் பங்கு உண்டு!

## கஜேந்திரகுமார் எம். பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்ரோபர் 24

**வடக்கு மாகாணத்தில் போதைப்பொருளை பரப்புவதில் இராணுவத்தினருக்கு பெரும் பங்கு உள்ளது. மக்கள்மீது உண்மையான பற்றுக் கொண்ட அரசாங்கம் ஒன்றால் மாத்திரமே போதைப்பொருளை முற்று முழுதாக ஒழிக்க முடியும் - இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருளைப் பரப்புவதில் இராணுவத்தினருக்கு பெரும் பங்கு உள்ளது. போர் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு பகுதிகளில் போதைப்பொருள் பாவனை பூச்சியமாக இருந்தது. அவர்கள் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் இயங்கியதால் இது சாத்தியமானது.

இதேகாலப்பகுதியில், வடக்கில் அரச கட்டுப்பாட்டு பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருந்தமையால் அங்கு போதைப் பொருள் அச்சுறுத்தல் குறைந்தளவிலேயே இருந்தது. எவ்வாறாயினும், போர் மௌனிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டுக்கு பின்னரே வடக்கில் பெருமளவில் போதைப் பொருள் பரவத் தொடங்கியுள்ளது.

இராணுவத்தினரே இந்த 07

# கஜேந்திரகுமாரின் சாடலை மறுக்கின்றது படை தரப்பு!

கொழும்பு, ஒக். 24

வடக்கில் இராணுவத்தினரால் போதைப்பொருள் விநியோகம் முன்னெடுக்கப்படுகிறது என்ற கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம். பியின் குற்றச்சாட்டை இராணுவம் மறுத்துள்ளது.

நாட்டில் போதைப் பொருள் ஒழிப்புக்கு இராணுவம் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் 07

# பார்த்தாலே பயம் வருகிறது ஆவியாக வந்துவிடாதீர்கள்!

எம். பியை பார்த்து கூறிய நீதி அமைச்சர்

கொழும்பு, ஒக். 24

"உங்களின் முகத்தை பார்த்தாலே பயமாகத்தான் இருக்கிறது. காலையில் பார்த்தால்கூட அப்படி தான். எனவே, தயவுசெய்து ஆவியாக வந்துவிட வேண்டாம். நாம் உங்களை பாதுகாப்போம். அச் சப்பட வேண் டாம்." - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் எம். பியின் 07

# போதைப்பொருள் கடத்தல்காரருக்கு மரண தண்டனையை நிறைவேற்றுக

## சிறைச்சாலைகள் ஆணையாளர்

- தூக்கு தண்டனை விதிக்கப்பட்டோரில் ஐவர் பாடசாலை மாணவர்கள்

கொழும்பு, ஒக். 24

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 5 பாடசாலை மாணவர்களும் 21 பெண்களும் உள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாவலப்பிட்டியில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "போதைப் பொருள் இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினரை அழித்து வருகிறது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 805 ஆண்கள் சிறையில் உள்ளனர். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 21 பெண்களும் 07

# கடலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

- சி. தில்லைநாதன், த.காண்டீபன் -

வடமராட்சி, ஒக். 24

வெற்றிலைக்கேணி கடலில் மீன் பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளி ஒருவர் படகில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டார்.

வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த துரை ராஜா அன்ரனி யோசப் (வயது 44) 07

# பாராளுமன்ற விதிகளை சிறீதரன் எம். பி. மீறினார்

சாமர சம்பத் எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 24

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பாராளுமன்ற நடத்தை விதிகள், சலுகைகளை மீறியுள்ளார் என்று சாமர சம்பத் தசநாயக்க எம். பி. நேற்று பாராளுமன்றத்தில் ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்தார்.

சிறீதரன் ஊழல் செய்துள்ளார். அவர் தனக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள்மீதான விசாரணையைத் தடுக்க முயன்றார் என்றும் சாமர சம்பத் பாராளுமன்றத்தில் கூறினார்.

சிறீதரன் இது குறித்து தான் அங்கம் வகிக்கும் அரசமைப்பு பேரவைக்கும் முறைப்பாடு 07


# பதிவாளரின் செயல்பாடுகளால் மாவட்டத்தின் உரிமைகள் பறிப்பு

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாண பல்கலைக்கழக பதிவாளரால் திட்டமிட்டு செயல்படுத்தப்படும் பொறுப்பற்ற நடவடிக்கையால் மாவட்டத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அந்தச் சங்கத்தின் தலைவர் 07



# கறுப்பு உடையில் சபைக்கு வந்த எதிர்க்கட்சியினர்!

கொழும்பு, ஒக். 24

வெலிகம பிரதேச சபை தலைவர் லசந்த விக்ரமசேகரவின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் நேற்று கறுப்பு உடை, கறுப்பு பட்டி அணிந்து பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தனர்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் எம். பி., நாட்டில் நிலவும் படுகொலை கலாசாரத்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் கறுப்பு உடை அணிந்து, கையில் கறுப்பு பட்டி அணிந்து பாராளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளோம் - என்று கூறினார். (ஐ)

# குற்றங்களில் ஈடுபடுவோரை அரசாங்கம் காப்பாற்றக்கூடாது

நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு அரச பாதுகாப்பு அளிக்க வேண்டாம் என்று மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஒரு குழு செயல்பாட்டில் ஈடுபடுகிறது. 07

# நிதியியல் ஸ்திரதன்மை இலக்கை அடுத்த ஆண்டுக்குள் அடைவோம்

மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஒக். 24

பணவீக்க மற்றும் நிதியியல் ஸ்திரதன்மைசார் இலக்குகள் அடுத்த வருடத்துக்குள் அடையப்படும். தற்போது பதிவாகியுள்ள மற்றும் எதிர்வுகூறப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி வீதமானது ஆரோக்கியமானதும் நிலையானதுமான மட்டத்தில் காணப்படுகிறது என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் 07

# குற்ற குழுவினரின் கைபேசியில் 'நாமல் சேர்' என்று பதிவு உள்ளது!

பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, ஒக். 24

கடந்த கால அரசாங்கங்கள் குற்றவாளிகளை பாதுகாத்து வந்துள்ளதாக பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றையதினம் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி இல்லாத நிலையில் 40 ஆயிரம் குடும்பங்கள்!

வடமராட்சி, ஒக். 24
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 40 ஆயிரம் குடும்பங்கள் காணி இல்லாத நிலையில் உள்ளன. இந்த நிலையில், வடமராட்சி கிழக்கு மணல்காட்டில் 300 ஏக்கர் காணிகளை ஆக்கிரமிக்க முயற்சி எடுக்கப்படுகிறது - இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இ. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மணல்காடு கிராமத்தில் 300 ஏக்கர் காணியை அபகரிக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட போராட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ். மாவட்டத்தில் மக்களுக்கு காணிகள் இல்லாதபோதும் அரச காணிகள் உள்ள ஒரே பிரதேச செயலர் பிரிவான வடமராட்சி கிழக்கில் தனியாருக்கு காணிகள் வழங்குவதை நிறுத்தவேண்டும். காணி இல்லாத மக்களுக்கு அந்த நிலங்களை பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ-02-03)


# சட்டவிரோத மீன்பிடி; 28 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 24
கடற்படையினரும் விசேட அதிரடி படையினரும் இணைந்து எடுத்த நடவடிக்கைகளில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரையான 15 நாட்களில் வடக்கு, கிழக்கு கடற்பரப்புகளில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து 8 டிங்கி படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை, குச்சவெளி பகுதிகளிலுள்ள கடற்றொழில் நீரியல் வள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பழ வகைகள் அன்பளிப்பு!



வடமராட்சி ஒக். 24
சுந்தசஷ்டி விரதத்தை கடைப்பிடிப்போருக்கு தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பழ வகைகள் வழங்கி வைக்கப்பட்டன.

கந்தசஷ்டி விரத ஆரம்ப தினமான நேற்று முன்தினம் 300 பேருக்கு பழ வகைகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரமத்தில் வைத்து இந்தப் பழப் பொதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், கந்தசஷ்டி விரத நாள் முழுவதும் பழங்கள் அன்பளிப்பு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

# கரவெட்டியில் நேற்று பனம் விதை நடுகை!



வடமராட்சி, ஒக். 24
கரவெட்டி கிழக்கில் நேற்றைய தினம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் புளூஸ் அறக்கட்டளை, புளூஸ் விளையாட்டு கழகத்தின் நிதி அனுசரணையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கரவெட்டி பிரதேச செயலகத்தால் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் பனம் விதைகள் நடுகை செய்யப் பட்டன.

இந்த நிகழ்வை சம்பிரதாய பூர்வமாக ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த பனம் விதை நடுகை திட்டம் 30 ஆயிரம் பனை மரங்களை உருவாக்கும் நோக்கில் அண்மையில் காலமான சமூக சேவையாளர் கணபதிப்பிள்ளை கந்தையா (கப்பூது ஐயா) ஞாபகார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயானந்தம் ஜெகோபி, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் அ. அகஸ்ரின், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெ. கலைச்செல்வி, ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர்கள், பொது மக்கள் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-02-05)

# "கடற்படை முன்னரிலும் பார்க்க வினைத்திறனாக செயல்படுகிறது"

யாழ்ப்பாணம், ஒக். 24
கடற்படையினர் கடந்த காலத்தைவிட அதிக வினைத்திறனுடன் செயல்படுகின்றனர். அவர்கள் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மிகக்கடுமையாக முன்னெடுக்க வேண்டும்", என்று வடக்கு மாகாண மீனவர் சங்கங்களின் இணையத்தின் செயலாளர் முகமட் ஆலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.


மேலும், கடந்த கால அரசாங்கத்தை விட தற்போதைய அரசாங்கம் இந்திய மீனவர்களை கைது செய்வதில் அதிக அக்கறை காட்டுகிறது. அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

வடக்கு மாகாணத்தை பிரதிநிதிப்படுத்தும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளார். இந்த அரசாங்கத்தைக் கொண்டு வந்ததில் எங்களுக்கு ஒரு பங்கு உண்டு. எனவே, கடற்றொழிலாளர்களின் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த அரசாங்கம் செயல்பட வேண்டும்.

பல்வேறு பகுதிகளில் இழுவை மீன்பிடி படகு தொழில் நடைபெறுகிறது. அவை கட்டுப்படுத்தப்பட வேண்டும். கடந்த காலத்தை விட இந்த அரசாங்கம் ஒரேநாளில் அதிகளவு இந்திய மீனவர்களை கைது செய்தது. கடந்த மாதம் ஐந்து படகுகளில் 40 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் உண்மையில் வரவேற்கத்தக்க விடயம்.

கடல் எங்களுக்கு உரியது கச்சதீவும் எங்களுக்கு உரியது. இறையாண்மைக்கு உட்பட்ட நாட்டில் நாங்களும் பங்காளி என்ற வகையில், "இந்திய மீனவர்களின் கைது நடவடிக்கை மேலும் அதிகரிக்க கடல் சார் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறோம் - என்றார். (ஐ)

# வட்டு. இந்து கல்லூரியில் குருதி கொடை முகாம்



யாழ்ப்பாணம், ஒக். 24
வட்டுக்கோட்டை இந்து கல்லூரியின் ஊடக கழகத்தின் ஏற்பாட்டில் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் நேற்று இரத்த தான முகாம் நடத்தப் பட்டது.

மருத்துவமனைகளில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த குருதிக் கொடை முகாம் நடத்தப்பட்டது.

இந்த இரத்ததான முகாமில் 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (ஐ-05)

# புதிய எழுத்தாளர்களுக்கான இலக்கிய படைப்பு போட்டி!

கொழும்பு, ஒக். 24
நிர்மாண யாத்திரை இலக்கிய படைப்பு போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. புதிய தலைமுறை எழுத்தாளர்களை வளர்க்கும் நோக்கில் அரச இலக்கிய குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகம் ஆகியவை இணைந்து இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளன.

படைப்புகளை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கவிதை, சிறுகதை என்ற இரு பிரிவுகளாக வழங்க முடியும்.

கவிதை சமர்ப்பிக்கும் ஒவ்வொரு பங்குபற்றுநரும் ஒவ்வொரு மொழிமூல ஊடகத்திலும் ஒரு கவிதையை சமர்ப்பிக்கலாம். கவிதை இரண்டு (2) ஏ-4 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

சிறுகதை சமர்ப்பிக்கும் ஒவ்வொரு பங்குபற்றுநரும் ஒவ்வொரு மொழிமூல ஊடகத்திலும் ஒரு சிறுகதையைச் சமர்ப்பிக்கலாம். சிறுகதை 3,000 சொற்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

இந்தப் போட்டி புதிய எழுத்தாளர்களுக்கானது. தேசிய அளவிலான இலக்கிய போட்டிகளில் விருதுகளை வென்ற அல்லது மூன்றுக்கும் மேற்பட்ட இலக்கிய படைப்புகளை வெளியிட்ட எழுத்தாளர்கள் பங்குபற்ற தகுதியற்றவர்கள். அனைத்து சமர்ப்பிப்புகளும் சுயமானதாகவும் வெளியிடப்படாத படைப்புகளாகவும் இருக்க வேண்டும். திருட்டு, தழுவல் அல்லது முன்னர் எழுதப்பட்டு பரிசு பெற்ற படைப்புகள் தகுதி நீக்கம் செய்யப்படும். சமர்ப்பிப்புகள் ஏ-4 தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாக கையால் எழுதப்பட்டிருக்க வேண்டும் அல்லது கணினியில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

பக்கங்களுக்கு இலக்கங்கள் இடப்பட வேண்டும். பங்குபற்றுநர் தங்கள் சமர்ப்பிப்பின் பிரதியை தம்வசம் வைத்திருக்க வேண்டும், ஏனெனில் சமர்ப்பிக்கப்பட்டவை மீண்டும் திருப்பி அனுப்பப்படாது.

தமது படைப்புகளை அனுப்பும்போது, அவற்றுடன் விண்ணப்பதாரரின் பெயர், படைப்பின் தலைப்பு, பக்கங்களின் எண்ணிக்கை, நிரந்தர முகவரி, தொலைபேசி வ்வாட்ஸ்அப் இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரி, படைப்பு சுயமானது என்பதை எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

புதிய எழுத்தாளர்கள் தமது சமர்ப்பிப்புகளை எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட தபாலில் அல்லது நேரடியாக வழங்கலாம். படைப்புகளை "செயலாளர் (இலக்கியப் போட்டி - 2025) இலங்கைக் கலைக் கழகம், இரண்டாம் கட்டம் (4 ஆவது தளம்), செத்சிரிபாய, பத்தரமுல்லை", என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஊழநாடு
24.10.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## யாரிடம் நீதி கோருவது?

இஸ்ரேல் - பலஸ்தீன அல்லது இஸ்ரேல் - ஹமாஸ் மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் சமாதான உடன்பாடு ஒன்று எட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அதன் பின்னரும் துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. குறித்த உடன்பாட்டில் பாதிக்கப்பட்ட தரப்பு என்று எவையும் இல்லை. குறிப்பாக, பலஸ்தீனர்களுக்கு எவ்வித இடமும் வழங்கப்படவில்லை. யுத்தத்தின்போது, 380 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுத உதவிகளை வழங்கிய அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்தான் கையெழுத்திட்டிருக்கிறார். அத்துடன், முஸ்லிம் நாடுகள் சிலவற்றின் தலைவர்களும் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

பலஸ்தீனர்கள் சார்பில் உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டும் என்று எவரும் கோரவுமில்லை - முக்கியமாக ஹமாஸ் அவ்வாறான கோரிக்கையை முன்வைக்கவில்லை. நிபந்தனைகள் வைக்கக்கூடிய நிலையில் அவர்களும் இல்லை. ஏனெனில், அந்தளவுக்கு அனைத்தையும் இஸ்ரேல் அழித்துவிட்டது. மேலும், சண்டையிட்டால் முழுவதுமாக அழிந்து போவோம் என்னும் நிலையில்தான் ஹமாஸ் அமெரிக்க நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது. அனைத்துக்கும் பின்னால் அமெரிக்காவே இருக்கிறது.

இஸ்ரேல் போர் குற்றங்களில் ஈடுபட்டதாகவும் அதில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு பங்கு உண்டு என்னும் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நெதன்யாகுவை போர் குற்றவாளியென்று அறிவித்து பிடிவிறாந்து பிறப்பித்தது. பிடிவிறாந்தைப் பிறப்பித்த குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமையாளர் தற்போது அமெரிக்காவின் கறுப்பு பட்டியலில் இடப்பட்டிருக்கிறார். அவருடைய சொத்துகள் முடக்கப்பட்டு, குடும்ப உறுப்பினர்கள், உதவியாளர்கள் அனைவரும் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். உலகில் நீதியை நிலைநாட்டும் பொறிமுறைகள் எந்தளவு அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

காஸா விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளில் 144இற்கும் மேற்பட்டவை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றிய பின்னரும்கூட, இஸ்ரேலின் முடிவில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. சர்வதேசத்திடம் நீதி கோருதல் என்பது எந்தளவு சிக்கலானது - நகைப்புக்கிடமானது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம். ஒரு விடயத்தைத் தொடர்ந்தும் பேசுபொருளாக வைத்துக் கொள்வதற்கு சில சபைகளில் பேசுவது பயன்படுமேயன்றி, அதற்கப்பால் இலங்கைத் தீவில் அரசியலை கையாளுவதற்கும் இவ்வாறான கோஷங்களுக்கும் வாதங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினாறு வருடங்கள் இதனைத் தெளிவாக உறுதிப்படுத்தியிருக்கிறது. இதற்கு பின்னரும்கூட, யுத்தத்துக்கு பின்னரான பதினாறு வருடங்களில் இலங்கையின் பொறுப்புக்கூறலில் ஒரு சிறிய முன்னேற்றத்தைக்கூட காண்பிக்க முடியாத நிலையில், இந்திய அமைதி படை காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் - நம்பப்படும் கொலைகளுக்கு எவரிடம் நீதியை கோருவது? ஒப்பீட்டடிப்படையில் இலங்கை ஒரு பலவீனமான சிறிய நாடு. ஆனால், அதனை சற்று கீழிறங்கிவந்து - பொறுப்புக்கூற வைப்பதே இதுவரையில் சாத்தியமற்ற விடயமாக இருக்கிறது. இந்த நிலையில் அணு ஆயுத சக்தியான - பொருளாதார நிலையில் நான்காவது சக்தியான - இராணுவ நிலையில் பெரும் சக்திகளில் ஒன்றான - பிராந்திய சக்தியான இந்தியாவை பொறுப்புக்கூற வைக்கலாம் என்று எண்ணுவதை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? ஒன்றில் பலர் அரசியலை ஒரு நகைச்சுவையாக மாற்ற முயற்சிக்கின்றனர் அல்லது பெரும்பாலானவர்கள் அறியாமைக்குள் மூழ்கி, அதிலிருந்து வெளியேற முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்.

# வடக்கு - கிழக்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில்!

**மீனவர்கள் கடலுக்கு செல்லவேண்டாம்
பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை**

யாழ்ப்பாணம், ஒக். 24

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் எதிர்வரும் சனிக்கிழமை முதல் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்ப்பது சிறந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா இதனை அறிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட வானிலை அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்-

வங்காள விரிகுடாவில் இன்று வெள்ளிக்கிழமை அந்தமான் தீவுகளுக்கு அருகாக மீண்டும் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது.

இந்த தாழமுக்கமும் வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து இந்தியாவின் ஆந்திர மாநிலத்திலுள்ள மசிலிப்பட்டினம் அருகே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக நாளை சனிக்கிழமை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அத்தோடு எதிர்வரும் சனிக்கிழமை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது - என்றுள்ளது. (அ)

# சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள் பொறுப்பு உணர்ந்து செயலாற்றவேண்டும்

**வடக்கு மாகாண ஆளுநர் அறிவுரை**

யாழ்ப்பாணம், ஒக். 24

மாகாண சபைகள் சார்பில் மக்களோடு நேரடியாகத் தொடர்புபட்டு பணியாற்றும் நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்களே. அந்த மன்றங்களின் சேவைகளை மக்களிடத்தே முன்கொண்டு செல்லவேண்டிய பொறுப்பும் அவற்றை விரைந்து சேவை செய்யும் நிறுவனங்களாக மாற்றும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களையே சாரும். அவர்கள் அந்தப் பொறுப்பை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான நகர அபிவிருத்தி அதிகார சபையின் விதிமுறைகள் குறித்த பயிற்சித் திட்டம், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து மேலாண்மை மேம்பாட்டுப் பயிற்சிப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டு வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகால், கிளிநொச்சியிலுள்ள பயிற்சி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, உரையாற்றிய ஆளுநர்,

உள்ளூராட்சி மன்றங்களுக்கு வெவ்வேறு விடயப் பரப்புக்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களை வலுப்படுத்துவதன் ஊடாகவே எமது மாகாணத்தின் அடிமட்ட அலகான உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்த முடியும். உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாகச் செயற்பட்டால்தான் மக்களின் தேவைகளை முழுமைப்படுத்த முடியும்.

மத்திய அரசாங்கத்தின் கீழான மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பன எவ்வாறு சுறுசுறுப்பாக விரைந்து மக்களின் தேவைகளைத் தீர்க்கின்றனவோ அதைப் போல, மாகாண அலகின் அலுவலகங்களும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட கௌரவ தவிசாளர்களான நீங்கள்தான் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

அதேநேரம் எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் சிறப்பாகச் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களை கௌரவிக்கவேண்டும். இதன் ஊடாக சிறப்பாகச் செயற்படுபவர்களை நாங்கள் ஊக்குவிக்கலாம். அத்துடன் தவிசாளர்களும், செயலாளர்களும் மக்களுக்கு சேவையாற்றத்தான் வந்தவர்கள். அதை மாத்திரம் மனதிலிருத்தி செயற்பட்டால் மக்களின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியும் - என்றார்.

இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் சமன் டிஸாநாயக்க, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**மிதுனம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைபீர்.

**கடகம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை எல்லாம் மனதில் நிழலாடும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரம் செழிக்கும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். நீண்டநாள் பிரச்னை தீரும். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை குறையும். பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். மோதல்கள் வந்து நீங்கும். நிதானம் தேவை.

**தனுசு**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந் துக் கொள்வார்கள். வியாபாரத்தை புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உற்சாகமான நாள்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

### ஐஸ் போதை, வாளுடன் இருவர் கைது

# புலனாய்வு பிரிவினருக்கு இலஞ்சம் கொடுக்க எடுத்த முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழில் 20 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் வாளுடன் இரண்டு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடனும் மற்றையவர் ஐஸ் மற்றும் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். 23 மற்றும் 25 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வாள் மற்றும் ஐஸ் போதையுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 20 இலட்சம் ரூபாய் பணத்தை புலனாய்வு பிரிவினருக்கு இலஞ்சமாக வழங்க முற்பட்ட வேளை புலனாய்வுப் பிரிவினர் அதனை வாங்க மறுத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-03-05)

# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஊராட்சி முற்றம் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 24

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் மற்றும் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு. நந்தகோபன் இணைத்தலைமையில் 2025 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் காலாண்டு ஊராட்சி முற்றக் கூட்டம் கடந்த 22 ஆம் திகதி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த கூட்டத்தில் ஆராயப் பட்ட மாவட்ட அளவில் தீர்க்கப்பட முடியாத பிரச்னைகளாக அடையாளம் காணப்பட்ட சிறுவர், பெண்கள் நலன் மற்றும் பாதுகாப்பு, கல்வி, விவசாயம், பெண்களின் சிறு கைத்தொழில் உற்பத்தி, கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள், போக்குவரத்து ஆகிய விடயங்களில் 3 விடயங்களுக்கு தீர்வுகள் வழங்கப் பட்டதற்கு குடிசார் அமைப்புகளின் சம்மேளனத்தின் தலைவி ம.தமிழ்ச்செல்வியால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும், மக்கள் எதிர்நோக்கும் பல்துறைசார் பிரச்னைகள் மற்றும் அவர்களின் தேவைப் பாடுகள் தொடர்பில் ஊராட்சி முற்றத்தில் கலந்துரையாடி தீர்வு வழங்குவதை நோக்காக கொண்டு இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் ஊராட்சி முற்ற கூட்டத்தின் நோக்கம், அதன் செயல்பாட்டு அடைவுகள், செயல்பாடுகளின் முன்னேற்றங்கள் மற்றும் மாவட்ட மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் இணையத்தின் ஊடாக நிதி விடுவிப்பு தொடர்பான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல், ஊராட்சி முற்ற அஞ்சல் பெட்டி வைக்க வேண்டிய இடங்கள் மற்றும் குறிகாட்டுவான் இறங்குதுறையில் மலசலகூடப்பிரச்னை தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

(எ)

# அக்ரஹார மருத்துவக்காப்புறுதி தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக். 24

அக்ரஹார மருத்துவக்காப்புறுதி தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் தலைமையில் கடந்த 22 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் கருத்து கூறுகையில், அக்ரஹார மருத்துவக்காப்புறுதி அரச உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் அக்ரஹார நிறுவனத்தின் கோரிக்கையின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் அக்ரஹார விடயங்களை தெளிவுபடுத்தி அரச உத்தியோகத்தர்களை தங்கத் திட்டத்தில் உள்வாங்குவதை நோக்கமாக கொண்டும் இக்கலந்துரையாடல் அமைவதாகவும், 1997 ஆம் ஆண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டு பின்னர் 2006ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியமாக மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் நிறுவன செயல்பாடுகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதால் கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வுகள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்தார். இருந்த போதும் சில இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகவும் அரச உத்தியோத்தர்கள் தெளிவான விளக்கத்தை பெற்றுக்கொண்டு இதன் மூலம் முழுமையான பயனை பெற்றுக் கொள்ளுமாறும் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் அக்ரஹார மருத்துவக்காப்புறுதியின் நன்மைகள், தங்கத்திட்டத்தின் பிரத்தியேக நன்மைகள் மற்றும் இத்திட்டத்தின் மூலம் அங்கத்தவர்களுக்கு மற்றும் அவர்களுடன் தங்கி வாழும் குடும்ப உறுப்பினர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் மற்றும் பெற்றுக்கொள்ளக்கூடிய உச்ச கொடுப்பனவுகள், அரச மற்றும் தனியார் வாகன காப்புறுதிகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

(எ)

# பாலம் செப்பனிடும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 24

சாவகச்சேரி புலோலி வீதியில் காணப்படும் பாலம் செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் 23ஆம் திகதி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை குறித்த வீதி மூடப்பட்டிருக்கும் என்பதை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அறியத்தந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

(எ)

## பிரான்ஸிலிருந்து துவிச்சக்கரவண்டியில் யாழ். வந்த இளைஞன்

யாழ்ப்பாணம், ஒக். 24

பிரான்ஸிலிருந்து பல்வேறு நாடுகள் ஊடாக துவிச்சக்கர வண்டியில் சுமார் 10,000 கிலோமீற்றர் தூரத்தை கடந்து நேற்று முன்தினம் பிற்பகல் சூரான் என்ற இளைஞன் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளார்.

நல்லூரை பூர்வீகமாகக் கொண்ட குறித்த 28 வயதுடைய இளைஞன், இலங்கையின் மகத்துவத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு பொறிமுறையாகவே இந்த துவிச்சக்கர வண்டி பயணத்தை முன்னெடுத்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததாக குறிப்பிட்டார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப் புதைகுழி விடயத்தில் வெளிநாட்டு தொழில்நுட்ப உதவி!

**நீதி அமைச்சர் ஹர்ஷண**

கொழும்பு, ஒக். 24

**"செம்மணி புதைகுழி விவகாரத்தில் சர்வதேச தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெறப்படும். ஏனெனில் உண்மையை கண்டறிவதற்கு இது முக்கியம்." - என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.**

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெறப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்டுவரும் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

செம்மணி புதைகுழி அகழ்வு நடவடிக்கைக்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எமக்கு சில விடயங்களில் ஆய்வுக்கூட வசதி இல்லை. எமது நாட்டு பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படவேண்டும். எமக்கு உண்மையை கண்டறிவதுதான் முக்கியம். தொழில்நுட்ப உதவியும் தேவைப்படுகின்றது. எனவே, சர்வதேச



தொழில்நுட்ப உதவி பெறப்படும்-என்றார். (அ)

# 25 வயதுக்கு மேற்பட்ட 4 பேரில் ஒருவருக்கு பக்கவாத அபாயம்!

கொழும்பு, ஒக். 24

25 வயதுக்கு மேற்பட்ட நான்கு பேரில் ஒருவருக்கு அவர்களின் வாழ்நாளில் பக்கவாதம் ஏற்படும் அபாயம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை போதனா வைத்தியசாலையின் சிறப்பு நரம்பியல் நிபுணர் சுரங்கி சோமரத்ன, பக்கவாத நோயாளிகளில் சுமார் 30 வீதம் பேர் 20 முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் என்று கூறியுள்ளார்.

இம் மாதம் 29ஆம் திகதி வரவுள்ள உலக பக்கவாத தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய நரம்பியல் நிபுணர், பக்கவாதம் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய பல நடவடிக்கைளை விபரித்தார்.

பக்கவாதம் ஏற்பட்டவர்களில் சுமார் 50 வீதம் பேருக்கு உயர் இரத்த அழுத்தம் ஒரு காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

பக்கவாதத்தை தடுப்பதற்கும் குறைப்பதற்கும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உரிய நேரத்தில் மருந்துகளை எடுத்துக்கொள்வதையும் சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்வதையும் உறுதி செய்ய வேண்டும். மேலும் உயர் இரத்த அழுத்தம் இல்லாதவர்கள் அதுவொரு ஆபத்தான காரணியாகுமுன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# இந்தியா-இலங்கை இடையே பாலம் அமைத்தால் ஆபத்து!

**மல்வத்து பீடாதிபதி சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஒக். 24

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையில் பாலம் அமைக்கப்பட்டால், சட்டவிரோத செயற்பாடுகள் மேலும் அதிகரிக்கக்கூடிய அபாயம் உள்ளதாக மல்வத்து விஹாரையின் பீடாதிபதி திப்பட்டுவாவே சிறீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கை இடையே கடல் வழியாக போதைப்பொருட்கள் உள்ளிட்ட சட்டவிரோத பொருட்கள் கடத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது அதிக எண்ணிக்கையிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு வருவதாகவும், இவை ஏதேனும் காரணத்திற்காக சமூகத்திற்குள் நுழைந்தால், பெரும் பேரழிவு வாய்ப்புள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

போதைப்பொருள் பறிமுதல் செய்யப்படும் அதேநேரம், அவற்றை இலங்கைக்குக் கொண்டுவருவதைக் கட்டுப்படுத்த அந்தந்த நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என மல்வத்து விஹாரையின் பீடாதிபதி வலியுறுத்தியுள்ளார். (அ)

# விமல் வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கு விசாரணை டிசெம்பரில்!

கொழும்பு, ஒக். 24

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ அமைச்சராகச் செயல்பட்டபோது சுமார் 75 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் நிதியை சட்டவிரோதமாகச் சம்பாதித்ததாகக் கூறி, அவருக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் 18 மற்றும் ஜனவரி 20 ஆகிய திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் நேற்று முன்தினம் அழைக்கப்பட்டது.

அதன்படி, குறித்த வழக்கின் விசாரணையை டிசெம்பர் 18 மற்றும் ஜனவரி 20 ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வழக்கு விசாரணைக்கு வந்த போது, இந்த வழக்கில் பிரதிவாதிக்கு வழங்கவேண்டிய அனைத்து ஆவணங்களும் தற்போது வழங்கப்பட்டுவிட்டதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆசாத் நவாவி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த ஆவணங்களை ஆராய வேண்டும் என பிரதிவாதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, அதற்கான திகதியை வழங்குமாறு கோரினார்.

கடந்த 2010 மற்றும் 2015 இற்கு இடையில் அரசாங்க அமைச்சராகப் பணியாற்றிய போது, தனது சட்டபூர்வ வருமானத்தை விட சுமார் 75 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் நிதியை சேகரித்ததன் ஊடாக இலஞ்சம் மற்றும் ஊழல் சட்டத்தின் கீழ் குற்றம் செய்ததாகக் கூறி, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக இந்த வழக்கைத் தாக்கல் செய்யப்பட்டது. (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிதாக 20 சுய பதிவு இயந்திரங்கள்!

கொழும்பு, ஒக். 24

பயணிகளின் விமானப் பயணத்துக்கான பதிவுகளை எளிதாக்கவும், பரபரப்பான நேரங்களில் ஏற்படும் நெரிசலைக் குறைக்கவும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் மேலும் 20 புதிய சுய பதிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்கள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் (தனியார்) நிறுவனம் மற்றும் சிறீலங்கன் எயார்லைன்ஸ் தரை கையாளுகை நிறுவனம் ஆகியன இணைந்து கூட்டாக அறிமுகப்படுத்தியுள்ளன.

புதிய இயந்திரங்கள் திறம்பட செயல்படவும், பயணிகளுக்கு மென்மையான அனுபவத்தை வழங்கவும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக சிறீலங்கன் எயார்லைன்ஸ் தரை கையாளுகை நிறுவனத்தின் விமான நிலைய பிரதானி தீபால் பள்ளேகங்கொட தெரிவித்தார்.

ஆரம்பத்தில் 8 சுய பதிவு இயந்திரங்கள் நிறுவப்பட்டிருந்த நிலையில், தற்போது மேலும் 20 இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் மொத்த சுய-பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது.

விமானப் பதிவுக்கான கால அவகாசம் மூன்று மணிநேரத்தில் இருந்து நான்கு மணிநேரமாக நீடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயணிகள் ஓய்வுடனும் இலகுவாகவும் தங்கள் பயணப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

பயணிகள் தாங்களாகவே பதிவுகளைச் செய்து கொள்ளும் வகையில் சுயமாக பயணப் பொதிகளை இடும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து விமானங்களுக்கான பதிவுகளும் புறப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் முடிவடையும் என்பதை பயணிகள் நினைவில் கொள்ளவேண்டும்.

இந்த புதிய வசதிகள் மூலம் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக பயணம் செய்யும் அனைத்துப் பயணிகளின் அனுபவமும் மேலும் சிறப்பாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.



# 1,416 கிலோ பீடி இலைகள் மீட்பு!

கொழும்பு, ஒக். 24

இலங்கை கடற்படையினர், கல்பிட்டி-தலவில கடல் பகுதியில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, நாட்டுக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சுமார் 1,416 கிலோகிராம் பீடி இலைகளைக் கைப்பற்றினர்.

அதன்படி, தலவில கடல் பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் விஜய நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, கடலில் மிதக்கும் 41 பைகள் பரிசோதிக்கப்பட்டன.

குறித்த நேரத்தில், கடற்படையினரின் நடவடிக்கைகளால் கரைக்கு கொண்டுவர முடியாமல், கடத்தல்காரர்களால் கடலில் கைவிடப்பட்ட சுமார் 1,416 கிலோகிராம் பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றினர்.

மேலும், கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கலால் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

# வரலாற்று ரயில் பாதையை மீளமைக்க ரூ. 25 கோடி நிதி!

கொழும்பு, ஒக். 24

களனிவெளி ரயில் மார்க்கத்தை அவிசாவளையில் இருந்து இரத்தினபுரி வரை நீடிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான திட்டத்தைத் தயாரிக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துதல் மற்றும் ரயில் இணைப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் நோக்குடன் இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஆரம்பப் பணிகளைத் தொடங்க, **2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் கீழ் ரூ. 25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

இந்த விரிவாக்கத் திட்டம் ரயில் சேவைகளின் திறனை அதிகரிப்பதுடன், பொதுப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கூற்றுப்படி, இந்த புதிய பாதை, பல தசாப்தங்களுக்கு முன்னர் சேவை நிறுத்தப்படுவதற்கு முன் இந்த பகுதியை இணைத்திருந்த பழைய ரயில் பாதைக்கு இணையாக மீண்டும் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் நிறைவடைந்ததும், கொழும்பு, அவிசாவளை மற்றும் இரத்தினபுரி ஆகியவற்றுக்கு இடையே நவீனமயமாக்கப்பட்ட ரயில் இணைப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது சப்ரகமுவ பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சி, சுற்றுலா மற்றும் பயணிகளுக்கான எளிதான அணுகுமுறையை ஆதரிக்கும் எனவும் அரசாங்கம் கூறுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# “வடக்கு, கிழக்கில் 650 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் விடுவிப்பு”

கொழும்பு, ஒக். 24

2025 ஆம் ஆண்டில் இதுவரை வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவப் பயன்பாட்டில் இருந்த 672 ஏக்கர் காணிகளை விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் 86.24 ஏக்கர் தனியார் காணிகளும், இராணுவப் பயன்பாட்டில் இருந்த 586 ஏக்கர் காணிகளும் அடங்குவதாக அவர் கூறினார்.

குறித்த காணிகள் தொடர்பான தகவல்கள், பாதுகாப்புச் சபை மற்றும் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் உள்ளடக்கப்பட்டு இந்த விடுவிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

கிழக்கில் மட்டும் 34.58 ஏக்கர் அரசாங்கக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

# கண்டி - கொழும்பு இடையிலான ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்

கண்டி, ஒக். 24

கடந்த ஞாயிற்றுக்கிழமை மண்சரிவு மற்றும் ரயில் தடம் புரண்டதால் தடைப்பட்டிருந்த கண்டிக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவைகள் நேற்று வியாழக்கிழமை காலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடும் மழையால் ரம்புக்கனைக்கும் பெரதெனியாவுக்கும் இடையிலான ரயில் மார்க்கத்தில் குறிப்பாக கடிகமுவ மற்றும் பலான நிலையங்களுக்கு இடையில், பல இடங்களில் மண்சரிவு மற்றும் மண்ணரிப்பு ஏற்பட்டது.

இதனால், பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

இருப்பினும், நேற்றைய தினம் காலை ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)



# மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்

சம்மாந்துறை, ஒக். 24

அம்பாறை, சம்மாந்துறை பிரதேச சபையின் கீழ் உள்ள நூலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்த “மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்” எனும் தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாதத்தின் பரிசளிப்பு நிகழ்வு அப்துல் மஜீட் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (எ-06)

# “முத்துநகர் விவசாயிகளின் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்”

திருகோணமலை, ஒக். 24

முத்துநகர் விவசாயிகளின் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தை முறையான தீர்வை வழங்கி அரசு முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று சிறீலங்கா ஜனநாயக கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகளின் விவசாய நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் விவசாய நில அபகரிப்புக்கு எதிராக தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முத்து நகர் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்து பிரச்னையை அவசரமாக தீர்த்து வைக்க அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும் என அந்தக் கட்சியின் பொருளாளர் பீ.எம். நினாப் அரசாங்கத்துக்கு கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அந்தக் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, குறித்த போராட்டம் பிரதமர் ஹரிணி அமரசூரிய வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்படுவதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு நிரந்தர தீர்வை முன்வைத்து இடம் பெற்று வருகிறது. இலங்கை துறைமுக அதிகார சபையின் காணி என கூறி 352 விவசாய குடும்பங்களை வெளியேற்றி சூரிய மின் சக்தி உற்பத்திக்காக தனியார் கம்பனிகளுக்கு தாரை வார்த்துள்ளதாக அங்கு வாழும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். குறித்த பகுதியில் இரு விவசாய நீர்ப்பாசன குளங்களை மூடி சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டத்துக்கு வழங்கியதால் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். இவற்றுக்கு தீர்வை வழங்கி மக்களுக்கு சாதகமான தீர்வை பெற்றுத்தர வேண்டியது அரசின் கடமையாகும்.

கடந்த காலங்களில் அந்த மாவட்டத்தில் இருந்த எம்.பிக்கள் உச்ச அதிகாரத்தில் இருந்த காலத்தில் இந்த மக்களின் பிரச்னைகளை தீர்த்திருக்க முடியும். அவர்கள் விட்ட பிழையே மக்கள் இன்று கஷ்டப்பட காரணம். எனவே, முத்துநகர் விவசாயிகளின் காணிகளை மக்களுக்கு வழங்க முன்வர வேண்டுமென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-06)

# மழை, காற்று, மின்னல் தாக்கம் குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

கொழும்பு, ஒக். 24

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் மேல், வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், தற்காலிகமாக அதிகரித்து வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், இலங்கையின் வடக்கு கரையோரப் பகுதியை அண்டியதாக நிலை கொண்டுள்ள குறைந்த அழுத்தப் பிரதேசம் ஒரு தாழமுக்கமாக விருத்தியடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், வடமேற்குத் திசையில் வட தமிழ்நாடு கரையை நோக்கி நகரக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் 01.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# காட்டு யானைகள் அட்டகாசம்: கிளிவெட்டியில் மரங்கள் நாசம்

திருகோணமலை, ஒக். 24

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிளிவெட்டி, குமாரபுரம் பகுதிகளுக்குள் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை புகுந்த காட்டு யானைகள் பயன் தரும் மரங்களுக்கு சேதங்களை விளைவித்துள்ளன.

இதன்போது கிளிவெட்டி உப தபால் அலுவலக வளாகத்திலிருந்த வாழை, தென்னை மரங்களும் சேதமாக்கப்பட்டன.

அத்துடன் குமாரபுரம் பகுதியில் காணப்பட்ட வாழை, தென்னை முதலான மரங்களையும் காட்டு யானைகள் சேதப்படுத்தின.



காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களிருந்து மக்களை பாதுகாக்கவும் யானைகள், மரங்களுக்கு சேதம் விளைவிப்பதை தவிர்ப்பதற்கும் உரிய அரச அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிவெட்டி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம்

மட்டக்களப்பு, ஒக். 24

முருகப்பெருமானின் தனிப்பெரும் விரதமாகவும் அதிகளவில் இந்துக்களால் அனுஷ்டிக்கப்படும் விரதமாகவும் உள்ள கந்தசஷ்டி விரதம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் கந்தசஷ்டி விரதம் வெகுவிமர்சையாக ஆரம்பமானதுடன் ஆயிரக்கணக்கான அடியார்கள் விரதம் அனுஷ்டிக்கின்றனர்.

அந்த வகையில், ஈழத்து திருச்செந்தூர் எனப்போற்றப்படும் மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம் ஆரம்பமானது.

நேற்று முன்தினம் காலை ஆலயத்தில் விசேட யாக பூஜை, அபிசேக பூஜை நடைபெற்றதை தொடர்ந்து விசேட பூஜைகள் நடைபெற்று கந்தசஷ்டியை முன்னிட்டு வைக்கப்பட்ட கும்பத்துக்கு அடியார்கள் பூ வைத்து வழிபடும் நிகழ்வு நடைபெற்றது. (எ)

# 5 மணிநேர விசாரணையின் பின் தர்மலிங்கம் சுரேஸ் விடுவிப்பு

கொழும்பு, ஒக். 24

கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் பணியகத்துக்கு வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்கு வரவழைக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் நேற்று முன்தினம் ஆஜராகி 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் அளித்த பின் னர் வெளியேறியுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த தர்மலிங்கம் சுரேஸ் வீட்டுக்கு கடந்த 18ஆம் திகதி சென்ற பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர், முகநூலில் கட்சியின் தலைவர், விடுதலைப் புலிகளின் தலைவர் ஆகிய இருவரும் ஒன்றாக இருந்த புகைப்படத்தை பதிவேற்றியதாகவும் அது தொடர்பான விசாரணைக்கு கொழும்புக்கு வருமாறும் கடிதத்தை வழங்கினர்.

இந்த நிலையில், கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பணியகத்துக்கு நேற்று முன்தினம் காலை சென்ற அவரிடம் சுமார் 5 மணித்தியாலங்களுக்கு மேலாக விசாரணை இடம்பெற்றதாகவும் வாக்குமூலத்தை வழங்கிய பின்னர் அங்கிருந்து பிற்பகல் 03.00 மணியளவில் வெளியேறியதாக தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலுக்கு...

என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவர், நேற்று முன்தினம் இரவு மீன் பிடிக்கத் தனது படகில் கடலுக்கு சென்றிருந்தார். நேற்று வியாழக்கிழமை அதிகாலையில் தான் சுகயீனமடைந்துள்ளார் என்று கைபேசி மூலம் குடும்பத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, உறவினர்கள் அவரை தேடிச் சென்றபோது படகில் சடலமாகக் காணப்பட்டார். கரைக்கு கொண்டு வரப்பட்ட அவரின் சடலம் உடல்கூராய்வுக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

## குற்ற....

மைத்திரி - ரணில் - சஜித், கோட்டா - ரணில் - ராஜபக்ஷ ஆகிய கூட்டுகளின் அரசாங்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு மற்றும் குற்றவாளிகளை பாதுகாத்தன. திட்டமிட்ட குற்றக்குழு உறுப்பினர் பெக்கோ சமன் போன்றவர்களின் கைபேசிகளில், 'நாமல் சேர்', 'எனது சேர் ராஜபக்ஷ' (மகே சேர் ராஜபக்ஷ) என்றவாறு கைபேசி இலக்கங்கள் பதிவாகியுள்ளன.

எனினும், அது இந்த நாமலா அல்லது வேறொரு நாமலா, இந்த ராஜபக்ஷவா அல்லது வேறொருவரா என்று தெரியவில்லை. எனவே, நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் வீணாகக் குழப்பமடையத் தேவையில்லை.

கொலைகாரர்கள், குற்றக் குழுவினர் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்குவது எந்தவொரு நாகரிக நாட்டிலும் இல்லை. அத்தகைய கோரிக்கைகளை தற்போதைய அரசாங்கம் நிராகரிக்கிறது.

தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தவொரு குற்றவாளியையும் பாதுகாக்காது. அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் - என்றார். (ஐ)

## வடக்கில்....

நடவடிக்கையில் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர். இன்று சில பகுதிகளில் சமூக விரோதிகளுக்கு அடைக்கலம் தரும் இடமாக இராணுவ முகாம் மாறியுள்ளது. விடுதலைப் புலிகளின் புரட்சியை தோற்கடிப்பதற்கு இராணுவத்தின் ஊடாகப் பயன்படுத்தப்பட்ட போதைப்பொருள் என்ற புற்றுநோய் இன்று தெற்கு வரை பரவியுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான முறைப்பாடுகளையும் பொலிஸ் நிலையங்கள் ஏற்க மறுகின்றன. எனவே, போதைப்பொருள் பரவலில் இராணுவத்துக்கு உள்ள தொடர்பு குறித்துத் தேடிப்பார்க்க வேண்டும்.

பொலிஸ், கல்வி, சுகாதாரம் போன்ற சமூகத்துக்கு மிகவும் தேவைப்படும் விடயத்தை அந்தந்த மக்களிடமே விட வேண்டும். அப்போதுதான் தங்களது மக்களுக்கு தாம் பொறுப்பானவர்கள் என்ற உணர்வு ஏற்படும். மாறாக, வடக்கு, கிழக்குடன் எவ்வித தொடர்பும் இல்லாத தரப்பினரால் அங்குள்ள பிரச்னைகளை ஒருபோதும் தீர்க்கமுடியாது. கடந்த காலங்களில் இத்தகைய தரப்பினரின் செயல்பாடுகளாலேயே வடக்கு மாகாணம் திட்டமிட்ட வகையில் கல்வி உள்ளிட்ட விடயங்களில் பின்தள்ளப்பட்டது.

அரசாங்கம் எடுக்கும் போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்துக்கு எம்மால் பூரண ஆதரவு வழங்கப்படும். எனினும், ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாயின், இந்த செயல்பாட்டிலிருந்து இராணுவத்தை முற்றுமுழுதாக நீக்க வேண்டும். நிபுணத்துவம் பெற்றவர்களை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தினால் மாத்திரமே போதைப்பொருள் ஒழிப்பு என்பது சாத்தியப்படும். போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு மாறாக போதைப்பொருளை விற்பவர்களே தண்டிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## குற்றங்களில்...

ஏனைய குழுவினர் கைது செய்யப்படுகின்றனர். இந்த செயல்பாட்டில் மக்களுக்கே அநீதி இழைக்கப்படுகிறது. எனக்கும் பிள்ளை இருக்கிறது. போதைப்பொருள் முற்றாக ஒழிக்கப்பட்டு இளம் தலைமுறை காப்பற்றப்பட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. நாங்கள் அன்று அதற்காக விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத் திட்டங்களை ஆரம்பித்தோம்.

ஆனால், அதற்கும் நீங்கள் குறை கூறினீர்கள். இவ்வாறான திட்டங்களை செய்யுங்கள். அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம். திட்டமிடப்பட்ட குற்றச்செல்களில் ஈடுபடுவோரை காப்பற்ற வேண்டாம்.

மித்தெனிய சம்பவத்துக்கு தடுத்து வைத்து விசாரிக்கும் ஆணை பிறப்பித்தார்கள். ஆனால், புவக்தண்டாவே சனாவுக்கு தடுத்து வைத்து விசாரிக்கும் ஆணையை பிறப்பிக்கவில்லை. போதைப்பொருளை வைத்துக் கொண்டு அரசியல் செய்ய வேண்டாம். அரசாங்கம் தங்களின் இயலாமையை மறைப்பதற்காக எதிர்க்கட்சிகளை ஒடுக்கப் பார்க்கிறது"- என்றார். (ஐ)

## போதைப்...

உள்ளனர். அத்துடன், 05 பாடசாலை மாணவர்களும் உள்ளனர்.

"தென் மாகாணமே பாதாள உலக நடவடிக்கைகளில் முதலிடத்தில் உள்ளது. இவ்வளவு படித்த சமூகம் கூலிக்குக் கொலை செய்யும் சமூகமாக எவ்வாறு மாறியுள்ளது என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

"பெருமளவில் போதைப்பொருட்களை கொண்டு வந்து இந்த நாட்டை அழிக்கும் நிலைக்கு அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள். இதற்கெல்லாம் மூலகாரணம் பெருமளவிலான போதைப்பொருள் கடத்தல் காரர்களே. அவர்கள் நிச்சயமாக தூக்கிலிடப்பட வேண்டும். ஏனென்றால் அவர்கள் ஒரு தேசத்தை அழிக்கிறார்கள். எனவே, பெருமளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தூக்கிலிடப்பட வேண்டும். அது பாவம் அல்ல." - என்றார். (ஐ)

## பதிவாளரின்...

யசோதன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும், "யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் காணப்படும் கல்வி சாரா ஊழியர்களின் 355 நிரந்தர பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி பெறுவதில் சிறு நிர்வாக தவறு ஏற்பட்டுள்ளது. இதேவேளை, இதன் போது திட்டமிட்ட பின்னடிப்பு செய்யப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 17 பல்கலைக்கழகங்களிலும் காணப்படும் போதனைசாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்களில் ஆயிரத்து 400 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது.

இதன்படி, அனைத்து பல்கலைக்கழகங்களாலும் வழங்கப்பட்ட கோரிக்கையின்படி காணப்படும் வெற்றிடங்களில் 67 சதவீத வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பெரும்பாலான பல்கலைக்கழகங்களால் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் காணப்படும் 355 பதவி வெற்றிடங்களில் 7 வெற்றிடங்களை நிரப்புவதற்கே மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்படுவது தனியே பல்கலைக்கழக சமூகம் மாத்திரமன்றி எமது சமூகத்தின் இளம் தொழில் தேடுவோருமே. இந்த நிலைமைக்கு யார் பொறுப்பு கூறுவது எனும் கேள்வி எமது மத்தியில் எழுந்துள்ளது. இதனால், நாம் எதிர்வரும் 28ஆம் திகதி யன்று ஒருநாள் அடையாள தொழிற் சங்க போராட்டத்தை நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்" - என்றார். (ஐ)

# மாகாண சபைகள் தேர்தல் தாமதத்துக்கு பாராளுமன்றமே பொறுப்பேற்க வேண்டும்!

### தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஒக். 24

மாகாண சபைகள் தேர்தல் காலந் தாழ்த்தப்படுவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கான பொறுப்பை பாராளுமன்றமே ஏற்க வேண்டும். பொருத்தமான முறைமையை பாராளுமன்றம் தேர்வு செய்தால், எந்த சந்தர்ப்பத்திலும் மாகாண சபைத் தேர்தலை தம்மால் நடத்த முடியும் - இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபைகள் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கு எம்மால் எந்த வகையிலும் பொறுப்புக்கூற முடியாது. மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு தற்போது நாட்டில் சட்டமொன்று இல்லை. இந்த பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையிலிருந்து தற்போது கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறைமைக்கு மாறியிருக்கிறோம். விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளாலேயே இந்த மாற்றம் ஏற்பட்டது. அதற்கமைய புதிய முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்த முறைமையே அறிமுகப்படுத்தப்பட்டது.

எனவே, தற்போது இறுதி தீர்மானத்தை எடுக்கக்கூடிய பொறுப்பு பாராளுமன்றத்திடமே காணப்படுகிறது. இந்த இரு முறைமைகளில் பொருத்தமானதை பாராளுமன்றமே தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு தேர்தல் முறைமை தேர்வு செய்யப்படும் பட்சத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் எம்மால் தேர்தலை நடத்த முடியும். அதில் எவ்வித சிக்கலும் இல்லை. அதேவேளை இத்தனை ஆண்டுகள் மாகாணசபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டமைக்கு சகலரும் பொறுப்பு கூற வேண்டும்.

எனவே அனைவரும் இந்த பொறுப்பினை ஏற்று ஒற்றுமையுடன் அதனை நிறைவேற்ற வேண்டும். அதனை விடுத்து ஒரு புறமாகவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் பக்கம் இந்த பந்தை தள்ளிவிடுவது பொருத்தமற்றது - என்றார்.

(ஐ)

## நிதியியல்...

வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் மேற்கொள்ளப்படும் நிதியியல் முறைமை மீளாய்வு தொடர்பில் தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு நேற்று மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இதில், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே மத்திய வங்கி ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது அசாதாரண மட்டத்திலான பணச்சுருக்க நிலைமை பதிவாகியிருக்கிறது. இருப்பினும் மத்திய வங்கியால் இலக்கிடப்பட்டுள்ளவாறு அடுத்த ஆண்டு பணவீக்கத்தை 5 சதவீத மட்டத்துக்குக் கொண்டுவரமுடியும். 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது நிதியியல் ஸ்திரத்தன்மை குறிப்பிடத்தக்க அளவால் முன்னேற்றமடைந்திருக்கிறது.

"இதேபோன்று பொருளாதார மீட்சியைப் பொறுத்தமட்டில், பொருளாதாரமானது தொடர்ச்சியாக 5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துவருகிறது. 2022 - 2023 இல் முகங்கொடுக்கநேர்ந்த தீவிர நெருக்கடியின் பின்னர், இப் போது பதிவாகியிருக்கும் பொருளாதார வளர்ச்சியானது மிகவும் ஆரோக்கியமான மட்டத்தில் இருப்பதாகவே நான் கருதுகின்றேன்"

அத்துடன், முதன்நிலை மீதி மற்றும் வருமான இலக்குகள் உள்ளடங்கலாக முக்கிய நிதியியல் இலக்குகளைத் தாண்டும் நிலையில் இலங்கை இருப்பதாகவும், இது நாட்டின் கடன் ஸ்திரத்தன்மையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் 2025இல் வாகன இறக்குமதிக்காக இலங்கையர்கள் சுமார் 150 கோடி டொலர்களை செலவிடுவர். இது முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் உயர்வானதாகும் - என்றும் கூறினார். (ஐ)

# இரத்தவாந்தி எடுத்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் உயிரிழந்தார். காரைநகர் பாண்டித்தாழ்வை சேர்ந்த 47 வயதான கோணலிங்கம் சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று காலை இரத்த வாந்தி எடுத்த அவர் வலந்தலை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர், யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில், அங்கு உயிரிழந்தார்.

அவரின் மரணம் தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

சாட்சிகளை ஊர்காவற்றுறை பொலிஸார் நெறிப்படுத்தினர். (ஐ-02)

## கஜேந்திர...

பிரிகேடியர் வருண கமகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் போதைப்பொருளை ஒழிப்பதற்கு பொலிஸார், விசேட அதிரடிப் படையினருடன் ஒத்துழைத்து இராணுவமும் செயல்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

## பார்த்தாலே...

கருத்துக்கு பதில் கொடுத்துள்ளார் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் உரையாற்றிய சாமர சம்பத் தஸநாயக்க எம்.பி., "என்னை கொலை செய்தால் ஆவியாக வந்தேனும் பழிவாங்குவேன்." என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் சிரித்தபடி மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## பாராளுமன்ற...

தெரிவிக்கத் தவறியுள்ளளார். சிறீதரனுக்கு எதிராக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ள கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பது அரசமைப்பு பேரவையின் பொறுப்பாகும். தனது சொந்த வழக்கின் முடிவை பாதிக்கக்கூடிய முடிவுகளில் அவர் ஈடுபட்டுள்ளமையால் இது ஒரு நலன் முரண்பாடாக அமைகிறது.

சிறுபான்மை எதிர்க்கட்சிகளால் பரிந்துரைக்கப்பட்டபோதிலும் சிறீதரன் அரசாங்க நலன்களுடன் இணைந்து செயல்படுவது, அவர் மீது வைத்த கூட்டு நம்பிக்கையை குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது. என்றும் சாமர சம்பத் தசநாயக்க - என்று கூறினார். அத்துடன், இது தொடர்பில் முறைப்பாடு ஒன்றையும் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, இந்த விடயம் சிறப்புரிமைகள் குழுவுக்கு பரிந்துரைக்கப்படும் என்று சபாநாயகர் நேற்று சபையில் அறிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## தனியார் பஸ் நடத்துநர்கள் 132 பேர் மீது நடவடிக்கை!

**பயணச் சீட்டு வழங்க தவறியதால்**

கொழும்பு, ஒக். 24

பயணிகளுக்குப் பயணச் சீட்டு வழங்கத் தவறிய குற்றச்சாட்டில் 132 தனியார் பஸ் நடத்துநர்கள் மீது மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், செல்லுபடியாகும் பயணச் சீட்டுகள் இன்றிப் பயணம் செய்த 09 பயணிகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தைச் செலுத்தும்போது தொலைபேசியை பயன்படுத்துதல், உரிமம் இல்லாமல் பஸ்ஸை இயக்குதல், மற்றும் போலி ஆவணங்கள் வைத்திருத்தல் உள்ளிட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 228 சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களின் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், கட்டாய மறுபயிற்சி மேற்கொள்ளுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

## அதிக வருவாய் வேண்டுமானால் மதுபான விலையை குறையுங்கள்

**சாமர சம்பத் வலியுறுத்தல்**

கொழும்பு, ஒக். 24

அரசாங்கம் விரும்பிய வரி வருவாய் இலக்குகளை அடைய வேண்டுமானால், மக்கள் மதுபானங்களை வாங்குவதற்கு வசதியாக விலைகளைக் குறைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"மக்களால் மதுபானங்களை வாங்க முடியாவிட்டால், நீங்கள் விரும்பிய வரி வருவாயை வசூலிக்க முடியாது. அதனால்தான் நான் அதிவிசேஷ மதுபானத்தின் விலையைக் குறைக்க வலியுறுத்தி வருகிறேன்" என்று சாமர சம்பத் தஸநாயக்க கூறினார்.

ஒரு அதிவிசேஷ மதுபானத்தின் விலை இன்று 4000 ரூபாவுக்கு அதிகமாக உள்ளது. விலையைக் குறைத்தால் மக்கள் வாங்குவார்கள். ஒரு போத்தலை 2500 ரூபாவுக்கு விற்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## பாராளுமன்றில் விசேட சோதனை!

கொழும்பு, ஒக். 24

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் மூன்று நாட்களுக்கு பாராளுமன்றத்தில் விசேட பாதுகாப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை சபாநாயகர் நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் நவம்பர் 4, 6 மற்றும் 7 ஆகிய மூன்று நாட்களில் பாராளுமன்றத்தில் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வறைகள் மற்றும் ஆடை அலுமாரிகள் உட்பட முழு பாராளுமன்ற கட்டடமும் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும் என்று சபாநாயகர் அறிவித்தார்.

இதற்கிடையில், நவம்பர் 7 ஆம் திகதி பாராளுமன்ற கட்டடத்தின் உயர் பாதுகாப்பு பகுதிகளும் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும்.

அன்றையதினம் பொது மக்கள் பார்வையிடும் பகுதி விருந்தினர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படும் என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விருந்தினர்களுக்கான அழைப்பிதழ்கள் நிதி அமைச்சினால் வழங்கப்படுவதுடன், விசேட பாதுகாப்பு திட்டம் அமுலில் இருக்கும் அன்றையதினம் (வெள்ளிக்கிழமை) பாராளுமன்றத்துக்கு வருகை தரும் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் சாரதிகளுடன் வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அன்று பாராளுமன்ற வாகன நிறுத்துமிடம் மூடப்படும் என்பதால், பாராளுமன்ற உறுப்பினர்கள் வரும் வாகனங்கள் வாகன நிறுத்துமிடத்துக்கு அனுப்பப்படும் என்றும் சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார்.

இதேவேளை, அன்றைய தினம் விசேட போக்குவரத்துத் திட்டமும் செயல்படுத்தப்படும் என்று சபாநாயகர் மேலும் தெரிவித்தார். (அ)

# லசந்த விக்ரமசேகர படுகொலை: சந்தேகநபர்கள் விரைவில் கைது!

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்**

கொழும்பு, ஒக். 24

**வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் குறித்த முக்கியமான தகவல்கள் கிடைத்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற அமர்வில் நேற்று உரையாற்றும்போதே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

அதன்படி, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகர நேற்று முன்தினம் அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இருந்தபோது இனந்தெரியாத துப்பாக்கிதாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார். (அ)

# லசந்த விக்ரமசேகர கொலைச் சம்பவத்தை பாதாள குழு முத்திரை குத்தி மறைக்க சதி!

**ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு**

கொழும்பு, ஒக். 24

வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்ரமசேகரவின் கொலையை பாதாள உலகக்குழு நடவடிக்கைகள் என்ற முத்திரையின் கீழ், மூடி மறைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம அமைப்பாளர் ரெஹான் ஜெயவிக்ரம குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், இந்தக் கொலை தொடர்பாக அரசாங்கத்தின் கருத்துகள் குறித்தும் அவர் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

முன்னதாக, லசந்த விக்ரமசேகர பாதுகாப்புக் கோரி பொலிஸ்மா அதிபருக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், நீதிமன்றத்துக்கு வெளியே அல்லது பிரதேச சபை வளாகத்துக்குள்தன்னைக்கொலை செய்ய முயற்சிகள் நடந்ததாக அவர் சுட்டிக்காட்டியதாகவும் ரெஹான் ஜெயவிக்ரம கூறினார்.

அதற்கமைய, அந்தக் கடிதத்தில் பொலிஸ் பாதுகாப்பையும் அவர் கோரியிருந்ததாகவும்ஆனால் பொலிஸ் பாதுகாப்பு ஒருபோதும் வழங்கப்படவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட தவிசாளர் லசந்த விக்ரமசேகர குறித்துப் பரவி வரும் கருத்துகள் புதியவை அல்ல என்றும், இந்தக் குற்றச்சாட்டுகள் சில மாதங்களுக்கு முன்னரே வெளிவந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், லசந்த விக்ரமசேகரவுக்கு எதிரான பெரும்பாலான வழக்குகள் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் தொடுக்கப்பட்டது என்றும், ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம அமைப்பாளர் ரெஹான் ஜெயவிக்ரம தெரிவித்தார். (அ)

# வெலிகம பிரதேச சபை தவிசாளரின் உடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்கு!

கொழும்பு, ஒக். 24

துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வெலிகம பிரதேச சபைத் தவிசாளரான "மிதிகம லசா" என்றழைக்கப்படும் லசந்த விக்ரமசேகரவின் பூதவுடல், அவரது வீட்டுக்கு இறுதி அஞ்சலிக்காக நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு கொண்டுசெல்லப்பட்டது.

நேற்று முன் தினம் காலை 10.30 மணியளவில், தவிசாளர் வெலிகம பிரதேச சபை அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது, அலுவலகத்துக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர் துப்பாக்கியால் சுட்டுத் தாக்கியதில் தவிசாளர் காயமடைந்தார்.

பின்னர் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து, பிரதேச சபை தவிசாளரின் கொலை தொடர்பில் விசாரணை நடத்த நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

கொல்லப்பட்ட தவிசாளரின் தலை மற்றும் கழுத்துப் பகுதிகளில் நான்கு முறை சுடப்பட்டதற்கான அடையாளம் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 2026ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் முன்பள்ளிகளுக்கு ஒரே பாடத் திட்டம்!

கொழும்பு, ஒக். 24

2026 முதல் அனைத்து பாலர் பாடசாலைகளுக்கும் ஒரே பாடத்திட்ட கட்டமைப்பு அமுல்படுத்தப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் கல்வி மறுசீரமைப்புக்கான பாராளுமன்ற உபகுழுவின் கூட்டம் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளித்த பிரமர், 2026 முதல் நாடு முழுவதும் உள்ள அனைத்து முன்பள்ளிகளுக்கும் ஒரே பாடத்திட்ட அமைப்பு நடைமுறைக்கு வரும் என தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

முன்பள்ளி கல்விக்கான பாடத்திட்டக் கட்டமைப்பு ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சுமார் 19,000 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உத்தியோகபூர்வ பயிற்சித் திட்டம் 2025 நவம்பர் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் இதற்கான ஆசிரியர் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளதுடன், புதிய பாடத்திட்ட கட்டமைப்பின்படி கற்பித்தல் நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்படும்.

எந்தவொரு பாடசாலையும் மூடப்படாது என்பதுடன், பாடசாலைகளை ஒன்றிணைத்து மேம்படுத்துவது தற்போது அரசாங்கத்தின் கொள்கையாகும். இது கல்வித் தரத்தை உயர்த்தவும், அனைத்து சிறுவர்களுக்கும் சம வாய்ப்புகளை வழங்கவும் நோக்கமாகக் கொண்டது- என்றார்.

இந்த பாராளுமன்ற உபகுழுக் கூட்டத்தில், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ, தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகள் மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org